A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 03 / 2022</u>**

திருமதி M. லதா,
1/113A, வசந்த நகர் 2வது தெரு,
நரசிங்கம் ஊராட்சி,
ஒத்தக்கடை ரோடு,
மதுரை 625 107.

………மேல்முறையீட்டாளர்
(திருமதி M. லதா)

எதிர்

செயற்பொறியாளர்/ கிழக்கு/மதுரை,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
62, EB Quarters, புதுநத்தம் ரோடு,
மதுரை – 2.

…… எதிர்மனுதாரர்
(திரு M. ராஜா காந்தி, செயற்பொறியாளர்/ கிழக்கு/மதுரை
திரு R. சேவியர் ஜஸ்டின், உதவி பொறியாளர்/மின்மாற்றி நிறுவுதல் /மதுரை)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 05-01-2022</u>**

**<u>கேட்புரை நாள்: 03-03-2022</u>**

**<u>ஆணை நாள்: 28-03-2022</u>**

05.01.2022 அன்று பெறப்பட்ட திருமதி M. லதா 1/113A, வசந்த நகர் 2வது தெரு, நரசிங்கம் ஊராட்சி, ஒத்தக்கடை ரோடு, மதுரை 625107 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 03/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 03.03.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

மேல்முறையீட்டாளர் குடியிருக்கும் வீட்டின் நடுப்பகுதி மேல்புறத்தில் செல்லும் உயரழுத்த மின்கம்பியை அகற்றுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 வீட்டின் நடுப்பகுதி மேல் புறத்தில் உயர்அழுத்த மின்கம்பி செல்வதால் அதனை மாற்றக் கோரி உதவி மின் பொறியாளர்/ ஒத்தக்கடை அவர்களிடம் மனு அளித்திருந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.2 மேற்கண்ட மனுவை அனுமதித்து ரூ.46,620/-யை செலுத்தி கோரியதன் பேரில் பணம் செலுத்தப்பட்டதாகவும், ஆனால் பொது மக்கள் ஆட்சேபனை செய்ததால் மின்கம்பி அகற்றப்படாமல் இருப்பதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே வீட்டின் மேற்புறத்தில் செல்லும் மின் கம்பியை அகற்றக் கோரி மேல்முறையீட்டாளர் மதுரை மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், மதுரை மின்பகிர்மான வட்டம் 05.10.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு:**

மதுரை மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 05.10.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**மன்றத்தின் தீர்வு**:*

*முறையீட்டாளரின் உயர்அழுத்த மின்பாதை மாற்றி அமைப்பதற்கு ஏற்படும் ஆட்சேபணையை மனுதாரர் நிவர்த்தி செய்து தரும் பட்சத்தில் மின்பாதை மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ள செயற்பொறியாளர் / பகிர்மானம் / கிழக்கு மதுரை அவர்களுக்கு மன்றம் ஆணையிடுகிறது செலவு தொகை இல்லை."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 03.03.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திருமதி M. லதா அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு M. ராஜா காந்தி, செயற்பொறியாளர்/ கிழக்கு/மதுரை மற்றும் திரு R. சேவியர் ஜஸ்டின், உதவி பொறியாளர்/மின்மாற்றி நிறுவுதல்/மதுரை மதுரை மின்பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 வசந்த நகர் 2 வது தெருவில் உள்ள ச.எண்:100-4, 325-ல் பிளாட் எண்:1 மனையிடத்தில் வீடு கட்டி குடியிருந்து வருவதாகவும், வீட்டின் நடுப்பகுதி மேல் புறத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் உயர்அழுத்த மின்சார கம்பி செல்வதால் அதனை மாற்றக் கோரி உதவி மின் பொறியாளர்/ ஒத்தக்கடை அவர்களிடம் மனு அளித்திருந்ததாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 உயரழுத்த மின்கம்பியை (HT Line) அகற்றக் கோரி நேரடியாக மின்சார வாரியத்தை அணுகி கடந்த 12.02.2021-இல் மனு அளித்ததாகவும், மேற்படி மனு

சம்பந்தமாக (Application No.1180221299) தமிழ்நாடு மின்சார வாரியம் மனுவை அனுமதித்து ரூ.46,620/−யை 04.03.2021−ற்குள் செலுத்த உத்தரவு பிறப்பித்ததின் பேரில் கடந்த 19.02.2021−இல் ரூ.46,620/−யை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பணம் செலுத்தியதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 ஆனால் 63 பேர் கையொப்பம் பெற்று ஆட்சேபனை செய்வதாகவும், ஆனால் எவர் வீட்டுக்கும் மின் கம்பியை கொண்டு செல்ல போவதில்லை எனவும், ரோட்டில் (20 Feet) தான் கொண்டுச் செல்லபோவதாகவும், மின் கம்பியை ரோட்டில் கொண்டு செல்ல ஊராட்சி மன்ற தலைவர் அனுமதி கடிதம் கொடுத்துள்ளதாகவும், அதனால் மின் கம்பத்தை ஊன்றி தருமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மனுதாரர் திருமதி M, லதா, 1/113A, வசந்தநகர் 3வது தெரு, நரசிங்கம் ஊராட்சி, ஒத்தக்கடை ரோடு, மதுரை அவர்கள் நகர்/ஒத்தக்கடை மின்பிரிவிற்கு உட்பட்ட தனது வீட்டின் மீது செல்லும் உயர்அழுத்த மின்பாதையினை DCW திட்டத்தில் மாற்றி அமைக்க கோரிய 12.02.2021 அன்று விண்ணப்பித்துள்ளார். பணிகள் முடிக்கப்படவில்லை என இணையதளம் வாயிலாக மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்திற்கு மனு செய்ததாகவும், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தால் வழங்கப்பட்ட ஆணையினை எதிர்த்து மனுதாரர் தமிழ்நாடு மின்சார குறைதீர்ப்பாளர் (Tamilnadu Electricity Ombudsman) அவர்களுக்கு மேல்முறையீடு செய்ததின் அடிப்படையில் சமரசம் காண பேச்சுவார்த்தைக்கு மேல்முறையீட்டளாருக்கும் ஆட்சேபனையாளருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு இசைவிணக்க பேச்சுவார்த்தை 28.01.2021 அன்று நடைபெற்றது. இருதரப்பினரும் கலந்து கொண்டு தங்களின் வாதத்தினை முன்வைத்தனர்.

6.2 சமரச பேச்சின் போது திருமதி. M. லதா அவர்கள் தனது வீட்டின் மீது செல்லும் உயர்அழுத்த மின்பாதையினை மாற்றி அமைக்க DCW திட்டத்தில் 19.02.2021 அன்று ரூ.46,620/− செலுத்தி ஒரு வருடம் ஆகிய நிலையில் இன்று வரை உயர்அழுத்த மின்பாதையினை மாற்றி அமைக்கவில்லை என தெரிவித்து பணியினை விரைந்து முடித்துதருமாறு கேட்டுக்கொண்டார். ஆட்சேபனையாளர்கள் சார்பாக திரு. S. பிரபாகரன், தலைவர், வழக்கறிஞர், வசந்தநகர் குடியிருப்போர் நலச்சங்கம், வசந்த நகர், யா. நரசிங்கம் மதுரை கிழக்கு வட்டம் அவர்கள் கலந்து கொண்டு தங்களது

தரப்பு வாதத்தினை எடுத்துரைத்தார். திருமதி. M. லதா பல ஆண்டுகளாக சென்று கொண்டிருந்த மின்பாதைக்கு கீழ் சட்டத்திற்கு முரணாக வீடு கட்டியுள்ளதாகவும் மின்பாதையினை மாற்றி அமைக்க மின் ஊழியர்கள் வந்தபோது தாங்கள் தடுத்ததாகவும், வசந்த நகர் பொது பாதைவழியான உயர்அழுத்த மின்பாதை கொண்டு செல்வது பாதுகாப்பற்றது என கருதி பகுதி பொதுமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து எதிர்ப்பதாகவும், பொது பாதையில் தான் தற்போது பொதுமக்களின் வழிபாட்டுத்தலம் விநாயகர் கோவில் உள்ளது எனவும், அதனால் பொதுமக்கள் வந்து செல்வதற்கும் அவர்களின் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலாக உள்ளது என்பதால் மேற்படி மின்பாதையினை வசந்த நகர் 3வது தெரு வழியாக கொண்டு செல்ல ஆட்சேபனை மற்றும் எதிர்ப்பும் தெரிவிப்பதாக ஆட்சேபனையாளர்கள் சார்பாக திரு பிரபாகரன் குறிப்பிட்டார்.

6.3 மேற்படி வீடு 110/11 KV ஒத்தக்கடை துணைமின் நிலையத்தின் 11 KV ஒத்தக்கடை உயர் அழுத்த மின்பாதையின் கீழ் வருவதாகவும், மின்பாதையினை மாற்றி அமைக்க பணிகள் மேற்கொள்ள வாரிய பணியாளர்கள் சென்ற போது பொதுமக்கள் ஆட்சேபனை தெரிவித்தார்கள். மேலும் வேலை செய்ய விடாமல் தடுத்தார்கள். எனவே மேற்படி மின்பாதையினை மாற்றி அமைக்கும் பணியினை மேற்கொள்ள இயலவில்லை. அதனை தொடர்ந்து வசந்த நகர் பொதுமக்கள் 63 பேர் கையொப்பமிட்டு ஆட்சேபனை கடிதம் பெறப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்படி மின்பாதையினை மாற்றி அமைக்க ஏற்பட்டுள்ள ஆட்சேபனையை சரிசெய்து தரும் பட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்படும் என 25.03.2021 நாளிட்ட கடிதம் வாயிலாக மேல்முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மேலும் அதனை தொடர்ந்து காவல் துறை ஆய்வாளர் ஒத்தக்கடை காவல் நிலையத்திற்கு 27.11.2021 அன்று மின்பாதையினை மாற்றி அமைக்கும் போது பணியாளர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கிட கேட்டுக்கொள்ளப்பட்டது. காவல்துறையின் காவலர்கள் உதவியுடன் பணிகள் 01.12.2021 அன்று மேற்கொள்ள சென்ற போதும் வசந்த நகர் பொதுமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பணிகள் செய்ய விடாமல் தடுத்ததாலும், சாலை மறியல் செய்யப்போவதாக கூறியதாலும், மின்பாதையினை மாற்றி அமைக்கும் பணிகளை மேற்கொள்ள இயலாமலும்

பணியாளர்களின் பாதுகாப்பு கருதியும் திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 சமரச பேச்சுவார்தையில் ஆட்சேபனையாளர்களாகிய பொதுமக்கள் மேற்படி DCW மேற்கொள்ள கடுமையாக ஆட்சேபனை தெரிவிப்பதால் மேற்படி உயர்அழுத்த மின்பாதையினை மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ள இயலாத சூழ்நிலை ஏற்றப்பட்டுள்ளது. எனவே மேற்படி மின்பாதையினை மாற்றி அமைக்கும் பணியினை மேற்கொள்ள இருதரப்பினரிடையே சமரசம் ஏற்படவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேற்படி பணியினை மேற்கொள்ள காவல் துறை உதவியுடன் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டும் வசந்த நகர் பொதுமக்களின் கடுமையான எதிர்ப்பு மற்றும் ஆட்சேபனையினால் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேலும், வட்டாட்சியர் கிழக்கு அவர்களுக்கும் மற்றும் காவல் துறை ஆய்வாளர் ஒத்தக்கடை அவர்களுக்கு 31.01.2022 அன்று பணிசெய்ய பாதுகாப்பு வழங்கிட உரிய நடவடிக்கை மேற்காள்ள கடிதம் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், காவல்துறை மற்றும் வட்டாட்சியர் அவர்களிடமிருந்து எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் ஏதும் இன்று வரை பெறப்படவில்லை எனவும், இருதரப்பு சமரச பேச்சு வார்தையில் இசைவிணக்கம் ஏதும் ஏற்படவில்லையெனவும், ஆட்சேபனையினை மேல்முறையீட்டாளர் சரிசெய்து தரும் பட்சத்தில் உயர்அழுத்த மின்பாதையினை மாற்றி அமைக்க தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் தயாராக இருக்கிறது என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திருமதி லதா அவர்கள் தனது வீட்டின் மேலே நடுப்பகுதியில் செல்லும் உயரழுத்த மின்கம்பியை இடம் மாற்றக்கோரி 12.02.2021–இல் மனு சமர்ப்பித்து எதிர்மனுதாரரின் கேட்பு தொகை ரூ.46,620/–ஐ 19.02.2021–இல் செலுத்தியதாகவும், மின்கம்பியை 20 அடி பொதுப்பாதையில் கொண்டு செல்ல ஊராட்சி மன்ற தலைவர் அனுமதி கடிதம் கொடுத்தும் சிலரின் ஆட்சேபனையினால்

எதிர்மனுதாரர் மேற்படி மின்கம்பியை இடம் மாற்றம் செய்யவில்லையென தெரிவித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளர் தன் வீட்டின் மீது செல்லும் உயரழுத்த மின் கம்பியை இடம் மாற்றக்கோரி DCW திட்டத்தின் கீழ் ரூ.46,620/-ஐ 19.02.2021-இல் செலுத்தி பிறகு பணிகள் மேற்கொண்டபோது வசந்த நகர் பொதுமக்கள் ஆட்சேபனை தெரிவித்தாலும், காவல்துறை உதவியுடன் பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்தும் பொதுமக்களின் கடுமையான எதிர்ப்பு காரணமாக மின் கம்பியை இடம் மாற்றும் பணிகள் மேற்கொள்ள இயலவில்லையெனவும், ஆட்சேபனையினை மேல்முறையீட்டாளர் சரிசெய்து தரும்பட்சத்தில் உயர் அழுத்த மின்கம்பியை இடம் மாற்றி அமைக்கப்படுமென எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.4 உயரழுத்த மின்கம்பியை பொதுப்பாதையில் மாற்றியமைக்கும்போது பொதுமக்களிடமிருந்து ஆட்சேபனை எழுந்துள்ளது. மின்நுகர்வோருக்கு மின்சாரம் வழங்கும் போது எதிர்மனுதாரர் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகளைப் பற்றி மின் பகிர்மான விதி(27)-இல் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட விதி 27-இல் உள்ள 5, 6, 7 மற்றும் 8 ஆகிய பிரிவுகள் 07.10.2014-இல் ஒழுங்குமுறை ஆணையத்தால் நீக்கப்பட்டுள்ளது. 07.10.2014-க்கு முன்பு இருந்த விதி 27(6) கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"27. Requisitions for Supply of Energy:*
> *xxxxx*
> *xxxxx*
> *xxxxx*
> *(6) Where the intending consumer's premises has no frontage on a street and the supply line from the Licensee's mains has to go upon, over or under the adjoining premises of any other person (whether or not the adjoining premises is owned jointly by the intending consumer and such other person), the intending consumer shall arrange at his/her own expense for any necessary way leave, licence or sanction before the supply is effected. Even when the frontage is available, but objections are raised for laying lines / cables/ poles through a route proposed by the Licensee involving minimum cost and in accordance with the technical norms, to extend supply to the intending consumer, the intending consumer shall arrange at his/her own expense necessary way leave , licence or sanction before the supply is effected. Any extra expense to be incurred by the Licensee in placing the supply line in accordance with the terms of the way leave, licence or sanction shall be borne by the intending consumer. In the event of way-leave, licence or sanction being cancelled or withdrawn, the intending consumer shall at his/her own cost*

*arrange for any diversion of the service line or the provision of any new service line thus rendered necessary."*

அதாவது மின்சாரம் வழங்குவதற்கான மின்பாதையை (way leave) மின் நுகர்வோரே தன் சொந்த செலவில் ஏற்படுத்தி தரவேண்டுமென தெரிகிறது. மேற்படி விதி 27-இன் 5, 6, 7 மற்றும் 8 ஆகிய பிரிவுகள் 07.10.2014 நாளிட்ட அறிவிக்கை வாயிலாக நீக்கப்பட்டுள்ளது. அதாவது, மின்கம்பி நிறுவப்படும் மின்பாதையை (way leave) மின் நுகர்வோர் தன் செலவில் ஏற்படுத்தித்தர வேண்டுமென்கிற பிரிவு 27(6) நீக்கப்பட்டுள்ளது. ஆகையால், உயரழுத்த மின்கம்பியை இடம் மாற்றி அமைக்கும்போது எழுந்துள்ள ஆட்சேபனையை மேல்முறையீட்டாளர் சரிசெய்து தரவேண்டுமென்கிற எதிர்மனுதாரரின் வாதம் ஏற்புடையதல்ல என கருதுகிறேன். இவ்வழக்கில் தற்போது பொது மக்கள் தெரிவிக்கும் ஆட்சேபனையை சரிசெய்ய வேண்டியது எதிர்மனுதாரரின் பொறுப்பு மற்றும் கடமையாகும்.

7.5 மேலும் மின்சார சட்டம் 2003, பிரிவு 164-இன்படி தந்தி தொலைதொடர்பு சட்டம் 1885-இல் கூறப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் மேற்கொண்டு மின்கம்பங்கள் மற்றும் மின்பாதை அமைப்பதற்கு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு அனுமதி வழங்கி தமிழ்நாடு அரசாரங்கம் G.O. (Ms) No.16 Energy (C3) Department, dated 23.02.2012-இல் ஆணை பிறப்பித்துள்ளது. மேற்கண்ட ஆணையில் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் வாயிலாக பொதுப்பாதையில் மின்பாதை அமைக்க எதிர்மனுதாரருக்கு உரிமை உள்ளது. மேற்படி பணி சம்பந்தமாக மாவட்ட ஆட்சியரிடம் (District Magistrate) விண்ணப்பம் அளித்து way leave ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது எதிர்மனுதாரரின் கடமையாகும். ஆகையால் மாவட்ட ஆட்சியரின் (District Magistrate) எழுத்துபூர்வ அனுமதி பெற்று மேற்கண்ட உயரழுத்த மின்பாதையை இடம் மாற்றி அமைக்குமாறு எதிர்மனுதாரருக்கு ஆணையிடுகிறேன்.

**8.0 <u>பகுப்பாய்வு:</u>**

8.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய மனையின் ஒரு பகுதியில் பழைய வீடு இருந்ததாகவும், போதிய இடைவெளியில் மனையின் மறுபகுதியில் உயரழுத்த மின்பாதை அமைந்திருந்ததாகவும், பிறகு பழைய வீட்டை இடித்துவிட்டு விரிவாக்கத்தோடு புதிய வீடு கட்டும்போது உயரழுத்த மின்கம்பியின் கீழ் வீடு கட்டப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. புதிய வீடு கட்டி முடித்தபின்

வீடு கட்டுவதுற்காக பெற்ற தற்காலிக மின் இணைப்பை வீட்டு மின்இணைப்பாக வீதப்பட்டி மாற்றும்போது புதிய வீட்டின் மேல்பகுதியில் உயரழுத்த மின்கம்பி செல்வது தெரிந்தே புதிய மின் இணைப்பு வழங்கப்பட்டது எதிர்மனுதாரரின் தவறாகும். எதிர்மனுதாரரின் இத்தகைய செயல் கண்டிக்கத்தக்கது.

**9.0 <u>முடிவுரை</u>:**

9.1 பத்தி 7–இல் உள்ள தீர்வின்படி, மேல்முறையீட்டாளரின் வீட்டின் மீது செல்லும் உயரழுத்த மின்கம்பியை இடம் மாற்றி அமைக்க மாவட்ட ஆட்சியரிடம் உரிய எழுத்துபூர்வ அனுமதி பெற்று மின்கம்பியை மாற்றி அமைத்து மேல்முறையீட்டாளரின் பாதுகாப்பை உறுதிசெய்யுமாறு ஆணையிடுகிறேன்.

9.2 இவ்வாணை கிடைக்கப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் மேற்கண்ட பணியை முடித்து 15 நாட்களுக்குள் ஆணையை நிறைவேற்றியமைக்கான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறேன்.

9.3 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 03/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>:
1. திருமதி M. லதா,
1/113A, வசந்த நகர் 2வது தெரு,
நரசிங்கம் ஊராட்சி,
ஒத்தக்கடை ரோடு,
மதுரை 625 107.

2. செயற்பொறியாளர்/ கிழக்கு/மதுரை,
மதுரை மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
62, EB Quarters, புதுநத்தம் ரோடு,
மதுரை – 2.

3. **மேற்பார்வை பொறியாளர்,** – **By email**
**மதுரை மின் பகிர்மான வட்டம்,**
**தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,**
ரேஸ் கோர்ஸ் ரோடு, K, புதூர், மதுரை – **625 007.**

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
**144**, அண்ணாசாலை, சென்னை – **600 002.**

**5.** செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
**4**வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – **600 032.**

**6.** உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
**4**வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – **600 032.**